

தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன், திருக்கோவிலூரில் கட்டப்பட்டு வரும் புதிய மாவட்ட மருத்துவமனை கட்டுமானப் பணியினை கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பிரசாந்த், மாவட்ட துணைச் செயலாளர் டி.என்.முருகன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.தங்கம், நகர செயலாளர் கோபிகிருஷ்ணன், ஒன்றியச் செயலாளர்கள் அ.சா.ஏ.பிரபு, பி.வி.ஆர்.சு.விசுவநாதன், பேரூராட்சி மன்ற தலைவர் எஸ். அன்பு, நகர மன்ற துணை தலைவர் உமாமகேஸ்வரி குணா, மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### புதுக்கோட்டை மாவட்டத்தில்

# “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட சிறப்பு முகாம்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் மக்களிடம் விண்ணப்பங்களை பெற்று விவரங்களை கேட்டறிந்தார்!

புதுக்கோட்டை, ஜூலை 21

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், ஆவணத்தான்கோட்டை எஸ்.டி.எம். மஹாலில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட சிறப்பு முகாமில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் (17.07.2025) அன்று மக்களிடம் விண்ணப்பங்களை பெற்று கொண்டு, விவரங்களை கேட்டறிந்து, மனுக்கள் பதிவு செய்யப்படுவதை ஆய்வு செய்தார்.

பின்னர் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது;

முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றிடும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை சிறப்பாக மேற்கொண்டு வருகிறார்கள். அந்த வகையில், முதலமைச்சர் அவர்கள் 15.07.2025 அன்று சிதம்பரத்தில், தமிழ்நாட்டிலுள்ள கடைகோடி மக்கள், அன்றாடம் அணுகும் அரசுத் துறைகளின் சேவைகள்/ திட்டங்களை, அவர்களின் இல்லங்களுக்கே சென்று வழங்கும், “உங்களுடன் ஸ்டாலின்” என்ற புதிய திட்டத்தை தொடங்கி வைத்துள்ளார்கள்.

“உங்களுடன்ஸ்டாலின்” திட்டத்தின் கீழான, முகாம்களில் நகர்ப்புறப் பகுதிகளில் 13 அரசுத் துறைகளின் 43 சேவைகளும், ஊரகப் பகுதிகளில் 15 அரசுத் துறைகளின் 46 சேவைகளும் வழங்கப்படும். இம்முகாம்களில் பெறப்படும் விண்ணப்பங்களின் மீது, உடனடியாகத் தீர்வு கிடைக்கக் கூடிய இனங்களில் உடனடியாகத் தீர்வு காணப்படும். பிற இனங்களில் அதிகபட்சமாக 45 நாட்களுக்குள் தீர்வு காணப்படும். அதன்படி, அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், ஆவணத்தான் கோட்டை எஸ்.டி.எம். மஹாலில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட சிறப்பு முகாமில் இன்றையதினம் கலந்து கொண்டு, மக்களிடம் விண்ணப்பங்களை பெற்று கொண்டு, விவரங்கள் கேட்டறியப்பட்டது.

எனவே, முதலமைச்சர் அவர்களால் பொதுமக்களின் நலன் காத்திடும் வகையில் செயல்படுத்தப்படும் இதுபோன்ற திட்டங்களை அனைவரும் உரிய முறையில் பயன்படுத்தி, தங்களது கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் எனவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்தார்.

இம்முகாமில், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ஜி.அமீர்பாஷா, உதவி ஆணையர் (கலால்) திருமால், அறந்தாங்கி வட்டாட்சியர் க.கருப்பையா, தனி வட்டாட்சியர் (ச.பா.தி.) எஸ்.ஜபருல்லா மற்றும் சண்முகநாதன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.



சேலம் மத்திய மாவட்டம், சேலம் தெற்கு சட்டமன்றத் தொகுதி, கருங்கல்பட்டி பகுதி, 57 வது கோட்டத்தில் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கையினை சேலம் தெற்கு சட்டமன்ற தொகுதி பார்வையாளர் பார் இளங்கோவன் பார்வையிட்டார். இந்நிகழ்வில் மாநகர செயலாளர் ரகுபதி, மாநகர துணை செயலாளர் வழக்கறிஞர் கணேசன், மாநகர பொருளாளர் செரீப், பகுதி செயலாளர் சரவணன், மண்டலகுழு தலைவர் அசோகன், பணிக்குழு உறுப்பினர்கள் அன்வர், கருங்கல்பட்டி சந்திரன், ஜெகன், கோட்டச் செயலாளர் சீனிவாசன், தாதை கார்த்தி, கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கட்பீஸ் அ. பழனி
### ஜூலை 21 (2019)



இளமைக் காலம் முதலே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.

வடசென்னை மாவட்டம், சார்பு மன்ற நிர்வாகி, 10வது வட்ட பகுதி பிரதிநிதி, இராயபுரம் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர், 1996 முதல் 2016 வரை தொடர்ந்து இராயபுரம் பகுதிச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

2006ல் சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்கள் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**





பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி செம்பாக்கம் வடக்கு பகுதி 38வது மற்றும் 22 வது வார்டில் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை பணி நடைபெற்று வந்தது. அப்பொழுது மாவட்டக் கழக துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ திடீரென ஆய்வு மேற்கொண்டு உறுப்பினர் சேர்க்கும் பணிகளை துரிதப்படுத்துமாறு கேட்டுக் கொண்டார் அப்பொழுது வட்டக் கழகச் செயலாளர்கள் க. ரமேஷ் என். நாகராஜ் பகுதி இளைஞரணி அமைப்பாளர் எல்.டில்லி பாபு நகர இளைஞரணி துணை அமைப்பாளர் எம். இளவரசன் பகுதி தகவல் தொழில்நுட்ப அணி சுந்தரமூர்த்தி பாக முகவர்கள் பாக டிஜிட்டல் ஏஜென்ட்கள் வட்ட கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்

### ஆட்சேபனையற்ற அரசு நிலங்களில் உள்ள

# கிறிஸ்தவ ஆலயங்களை வரன்முறைப்படுத்த வேண்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு, பேராயர் கதிரொளி மாணிக்கம் கோரிக்கை!

சென்னை, ஜூலை 21-

ஆட்சேபனையற்ற அரசு நிலங்களில் உள்ள கிறிஸ்தவ ஆலயங்களை வரன்முறைப் படுத்த வேண்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு, பேராயர் கதிரொளி மாணிக்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்திய சமூகநீதி இயக்கத்தின் 27 வது ஆண்டு விழா மற்றும் இந்திய சமூக நீதி இயக்கத்தின் முன்னாள் தலைவர் மறைந்த எஸ்றா சற்குணம்

பிறந்தநாள் விழா, ஒடுக்கப்பட்டோர் தினமாக கொண்டாடப்பட்டது.

விழாவிற்கு, இசிஐ பிரதம பேராயர் ஸ்டீபன் டேனியல் தலைமை தாங்கினார்.

இந்திய சமூகநீதி இயக்கத்தின் தலைவரும், எஸ்றா சற்குணத்தின் மகளுமான பேராயர் கதிரொளி மாணிக்கம் முன்னிலை வகித்தார்.

நிகழ்ச்சியில், பேராயர் கதிரொளி மாணிக்கம் பேசியதாவது :

தந்தை பேராயர் எஸ்றா சற்குணம் வசித்து வந்த வாடல்ஸ் ரோடு என்கிற சாலையை பேராயர் எஸ்றா சற்குணம் சாலை என்று மாற்றி அமைத்தற்கு முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு பகுதிகளில் காணப்படும் கிறிஸ்துவ தேவாலயங்கள் சமுதாய பணிகளோடு, ஆன்மீக பணிகளை செய்துவருகிறது. தமிழ்நாட்டில் உள்ள ஆட்சேபனையற்ற (Unobjectionable Land) அரசு நிலங்களில் இருக்கின்ற அனைத்து தேவாலயங்களையும் வரன்முறை படுத்தி அரசு ஆணை வெளியிடுவதற்கு உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று அனைத்து தாழ்த்தப்பட்ட



மறைந்த பேராயர் எஸ்றா சற்குணம் பிறந்தநாள் விழாவில், இந்திய சமூகநீதி இயக்கத்தின் தலைவர் பேராயர் கதிரொளி மாணிக்கம், அதன் பொதுச் செயலாளர் காலேப் சி.கோபிநாத்திற்கு நினைவு பரிசு வழங்கினர். உடன் தொல். திருமாவளவன் எம்.பி., இ.சி.ஐ. பிரதம பேராயர் ஸ்டீபன் டேனியல் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

-பிற்படுத்தப்பட்ட கிறிஸ்தவ சமுதாயத்தை சேர்ந்த மக்கள் சார்பாகவும், இந்திய சமூக நீதி இயக்கம் மற்றும் இந்திய சுவிசேஷ திருச்சபை சார்பாகவும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு கோரிக்கை வைக்கிறேன். இதன் மூலமாக 1 கோடிக்கும் அதிகமான கிறிஸ்தவர்கள் நன்மை அடைவார்கள். அதுமட்டுமின்றி, கிறிஸ்தவ ஆதிதிராவிட சமூகத்தைச் சேர்ந்த மக்களை எஸ். சி. பட்டியலில் சேர்க்கவேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

தொடர்ந்து, “கிறிஸ்தவத்தில் சமூகநீதி” என்ற தலைப்பில் நடந்த கருத்தரங்கில்

தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவர் பீட்டர் அல்போன்ஸ், தி.மு.க. கொள்கை பரப்பு செயலாளர் திண்டுக்கல் ஐ.லியோனி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன், வழக்கறிஞர் அ.அருள்மொழி உள்ளிட்டோர் உரையாற்றினர்.

முன்னதாக, பேராயர் எஸ்றா சற்குணம் படத்திற்கு, அமைச்சர் பி.கே. சேகர் பாபு உள்ளிட்டோர் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

விழாவில், சுமார் ரூ. 30 லட்சம் மதிப்பில் தையல் இயந்திரம், கிரைண்டர், மிதிவண்டி, காய்கறி வண்டிகள் மற்றும் பள்ளியில் பயிலுகின்ற மாணவ, மாணவிகளுக்கு கல்வி உதவித் தொகையும் சேர்த்து மொத்தம் 300க்கும் மேற்பட்ட சமுதாயத்தில் விளிம்பு நிலையில் உள்ள மக்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. தொடர்ந்து, இந்த ஆண்டு முழுவதும் சுமார் 1 கோடி ரூபாய்க்கு மேல் உதவிகள் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் வழங்கப்பட இருக்கிறது.

நிகழ்ச்சியில், தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினர் பி. வில்சன், மாநகராட்சி மேயர் பிரியா, எம்.எல்.ஏ.க்கள் இனிகோ இருதயராஜ், தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், காரப்பாக்கம் கணபதி, மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் சிற்றரசு, வி.சி.க துணைப் பொதுச் செயலாளர் வன்னியரசு, மாவட்ட செயலாளர் சேத்துப்பட்டு இளங்கோ, மற்றும் சமூக நீதி இயக்க நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். விழாவில் கலந்துகொண்ட அனைவருக்கும் இந்திய சமூக நீதி இயக்கத்தின் பொதுச் செயலாளர் காலேப் சி.கோபிநாத் நன்றி கூறினார்.

# இந்திய கப்பல் மாலுமிகள் முன்னேற்ற சங்க நிர்வாகிகள்!

## தொ.மு.ச. பேரவை அறிவிப்பு!

தொ.மு.ச. பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் இந்திய கப்பல் மாலுமிகள் முன்னேற்ற சங்கம் (பதிவு எண். 328/ஊனுசு, பேரவை இணைப்பு எண். 1133) நிர்வாகிகளாக கீழ்க்கண்டவர்கள் அறிவிக்கப்படு கிறார்கள்.

சங்க நிர்வாகிகள்

| | |
|---|---|
| தலைவர் | ஆ. அருணகிரிநாதன் |
| துணைத் தலைவர்கள் | 1) கிறிஸ்டோபர் கிஷோர் குமார் |
| | 2) A.S. விவேகானந்த் |
| | 3) பீட்டர் தாசன் |
| | 4) சூ. சந்திரசேகரன் |
| பொதுச்செயலாளர் | J. வினோத்குமார் |
| துணைச்செயலாளர்கள் | 1) ஆரோக்ய அந்தோணி மைக்கில் தேவசகாயம் |
| | 2) சு. பாலமுருகன் |
| | 3) அந்தோணி பிரசாத் பெனடிக் |
| | 4) நாகராஜன் இசக்கியப்பன் |
| பொருளாளர் | ஜோசப் மேத்யூ டெனி |
| பொதுக்குழு உறுப்பினர்கள் | 1) அக்சார் ஹைட்ரோஸ் |
| | 2) சபரீஸ் ஐயப்பன் |
| | 3) அரவிந்தன் மகேந்திர வர்மன் |
| | 4) கோபி பாலசுப்பிரமணியன் |

**இடம் : கலைஞரகம்**
நாள் :19.07.2025

**(மு.சண்முகம், எம்.பி.)**
பொதுச்செயலாளர்,
தொ.மு.ச. பேரவை

# கலைஞரின் மூத்த புதல்வர் மு.க.முத்து மறைவு!

## பிரசிடெண்ட் அபூபக்கர் இரங்கல்!

சென்னை, ஜூலை 21 -

மு.க.முத்து மறைவுக்கு இந்திய ஹஜ் அசோசியேசன் தலைவர் பிரசிடெண்ட் அபூபக்கர் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:

முன்னாள் முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களின் மூத்த புதல்வர் அண்ணன் மு.க.முத்து மறைவு செய்தி மிகவும் அதிர்ச்சி அளிக்கிறது. 40 ஆண்டுகளுக்கு மேலாய் எங்கள் குடும்ப நண்பராக இருந்தவர். பல்வேறு கால கட்டங்களில் மனிதநேய மிக்க மனிதராக அவர் வாழ்ந்திருக்கிறார்.

அரசியலில் முகம் காட்டாவிட்டாலும் கூட நெருக்கமானவர்களுக்கு அகமும், முகமுமாய் இருந்து பழகியவர். அவரது மறைவு எனக்கு தனிப்பட்ட முறையில் மட்டுமல்லாது இஸ்லாமிய சமூகத்தினர் அனைவருக்கும் பேரிழப்பாகும். அவரது ஆன்மா அமைதியின் நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும் , இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் அமைச்சருமான பி.கே.சேகர்பாபு ஆலோசனைபடி சென்னை கிழக்கு மாவட்ட பிரதிநிதி கி.நாகலிங்கம், திரு.வி.க.நகர் தெற்கு பகுதி 76 (அ) வட்ட துணைச் செயலாளர் திருமதி சத்யா நாகலிங்கம், திரு.வி.க.நகர் தெற்கு பகுதி பிரதிநிதி பி.வினோத் ஆகியோர் நேற்று (20/07/2025) காலை திரு.வி.க.நகர் தெற்கு பகுதி 76(அ) வட்டத்திற்கு உட்பட்ட கே.எம்.கார்டன் பகுதி 205வது பாகத்தில் உள்ள 4,5, 6வது தெருவில், வீடு, வீடாக சென்று திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சாதனைகளை எடுத்துக் கூறி கழக உறுப்பினர் சேர்க்கும் பணியில் ஈடுபட்டனர். இந்நிகழ்வில் திரு.வி.க.நகர் தெற்கு பகுதி 76(அ) வட்ட தகவல் தொழில்நுட்ப அணி எம்.அசோக்குமார் மற்றும் ஏ.நெல்சன்ஜான் , மு.விமல்ராஜ் ( BLA2 ), ஏ.தேவானந்தம் , டி.கார்த்திக் , ஏ.கமல் , என்.சி.வெங்கடேசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.